# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

## நிருவாகப் பதவியணியினர்

**உள்ளகக் கணக்காய்வாளர் பதவி**

**தகைமைகள், தகுதி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை**

1. (a) இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (CASL) அல்லது அதற்கு இணையாள ஒரு நிறுவகத்தின் உறுப்புரிமையைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

(b) மேற்குறித்த 1(a) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பூர்த்திசெய்ததன் பின்னர் ஒரு கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு நிறைவேற்றுப் பதவியில் ஆகக்குறைந்தது ஆறு (06) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

2. பின்வருவன அடங்கலாக UGC இல் அல்லது உயர் கல்வி நிறுவகத்தில்/பிற நிறுவகத்தில் பிரதிக் கணக்காளர்/பிரதிக் காசாளர்/பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை வகிக்கின்ற ஒருவராக இருத்தல்.

- கூறப்பட்ட அந்தப் பதவியில் மூன்று வருட கால திருப்திகரமான அனுபவத்துடன் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல். அத்துடன் மேற்குறித்த 1(a) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் அந்தப் பதவியில் ஒரு (01) வருட காலம் சேவை செய்திருத்தல்.

அல்லது

3. பின்வருவனவற்றில் எல்லாம் அடங்கலாக UGC இல் அல்லது உயர் கல்வி நிறுவகத்தில் / பிற நிறுவகத்தில் சிரேஷ்ட உதவிக் கணக்காளர் / சிரேஷ்ட உதவிக் காசாளர் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை வகிக்கின்ற ஒருவராக இருத்தல்.

- ஒரு கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு நிறைவேற்றுப் பதவியில் பத்து (10) வருட கால அனுபவத்துடன் குறித்த பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
- பல்கலைக்கழக முறைமையினுள் ஒரு சிரேஷ்ட உதவிக் கணக்காளர் / சிரேஷ்ட உதவிக் காசாளர் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் பத்து (10) வருடங்களுக்கு அதிக காலத்தில் ஆகக்குறைந்தது எட்டு (08) வருட கால திருப்திகரமான அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
- மேற்குறித்த 1(a) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பூர்த்திசெய்ததன் பின்னர் மேற்குறித்த எட்டு (08) வருட காலத்தில் மூன்று (03) வருட கால அனுபவம் இருத்தல்.

அல்லது

4. பின்வருவனவற்றில் எல்லாம் அடங்கலாக UGC இல் / ஒரு உயர் கல்வி நிறுவகத்தில் / பிற நிறுவகத்தில் ஒரு பிரதிக் கணக்காளர் / பிரதிக் காசாளர் / பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை வகிக்கின்ற ஒருவராக இருத்தல்.

- அந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
- இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (CASL) அல்லது அதற்கு இணையான ஒரு நிறுவகத்தின் இடைநிலைத் தகைமையைப் பெற்றிருத்தல்.
- அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் / HEI இல் ஒரு கணக்கியல் / நிதி / முகாமைத்துவ* விடயத்தில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.
- CASL இன் அல்லது அதற்கு இணையான ஒரு நிறுவகத்தின் இடைநிலைத் தகைமையை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் ஒரு கணக்கியல் மற்றும் / அல்லது கணக்காய்வு நிறைவேற்றுப் பதவியில் பன்னிரெண்டு (12) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
- மேற்குறித்த பத்து (10) வருட கால அனுபவம் பல்கலைக்கழக முறைமையினுள் ஒரு சிரேஷ்ட உதவிக் கணக்காளர்/சிரேஷ்ட உதவிக் காசாளர்/சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் அல்லது அதற்கு மேலான ஒரு பதவியில் இருத்தல் வேண்டும்.

அல்லது

5. பின்வருவனவற்றில் எல்லாம் அடங்கலாக UGC இல் / ஒரு உயர் கல்வி நிறுவகத்தில்/பிற நிறுவகத்தில் ஒரு பிரதிக் கணக்காளர் / பிரதிக் காசாளர் / பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை வகிக்கின்ற ஒருவராக இருத்தல்.

- குறித்த பதவியில் மூன்று (03) வருட கால திருப்திகரமான சேவையுடன் அதில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.

- அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் / HEI இல் ஒரு கலைமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

- இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (CASL) அல்லது அதற்கு இணையான ஒரு நிறுவகத்தின் இடைநிலைத் தகுதியைப் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் அல்லது அதன் வாரிசு நிறுவகத்தினால் நடத்தப்படும் கணக்கியல் தேசிய உயர் டிப்ளோமா (HNDA) பட்டத்தைப் பெற்றிருத்தல்.

- மேலே கூறப்பட்டுள்ள இடைநிலைத் தகைமையை/HNDA பட்டத்தைப் பெற்றதன் பின்னர் ஒரு கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு நிறைவேற்றுப் பதவியில் பதினான்கு (14) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

- ஆகக்குறைந்த அத்தகைய ஐந்து (05) வருட கால அனுபவம் U-EX 2 (I) என்ற சம்பளக் குறியீட்டினால் குறித்துரைக்கப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்தில், பல்கலைக்கழக முறைமையினுள், பிரதிக் கணக்காளர்/பிரதிக் காசாளர்/பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும்/அல்லது சிரேஷ்ட உதவிக் கணக்காளர்/சிரேஷ்ட உதவிக் காசாளர்/சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் பதவியில் இருத்தல் வேண்டும்.
.

அல்லது

6. பின்வருவனவற்றில் எல்லாம் அடங்கலாக UGC இல் / ஒரு உயர் கல்வி நிறுவகத்தில்/பிற நிறுவகத்தில் ஒரு பிரதிக் கணக்காளர் / பிரதிக் காசாளர் / பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை வகிக்கின்ற ஒருவராக இருத்தல்.

- அந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.

- அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் / HEI இல் ஒரு கலைமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (CASL) அல்லது அதற்கு இணையான ஒரு நிறுவகத்தின் இடைநிலைத் தகுதியைப் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் அல்லது அதன் வாரிசு நிறுவகத்தினால் நடத்தப்படும் கணக்கியல் தேசிய உயர் டிப்ளோமா (HNDA) பட்டத்தைப் பெற்றிருத்தல்.

- பல்கலைக்கழக முறைமையினுள் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு விடயத்தில் பதினெட்டு (18) வருடங்களுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

- மேற்குறித்த மூன்று (03) வருட அனுபவம் பல்கலைக்கழக முறைமையினுள் பிரதிக் கணக்காளர்/பிரதிக் காசாளர்/பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் இருத்தல் வேண்டும்.

அல்லது

7. பின்வருவன அடங்கலாக இலங்கைக் கணக்காளர்கள் சேவையில் கணக்காளர் தரம் II பதவியை வகிக்கின்ற ஒருவராக இருத்தல்.

- இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (CASL) அல்லது அதற்கு இணையான ஒரு நிறுவகத்தின் உறுப்புரிமையைப் பெற்றிருத்தல்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் / HEI இல் ஒரு கணக்கியல் / நிதி / முகாமைத்துவ* விடயத்தில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு: 'கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு'** அனுபவம் என்பது ஒரு அரச நிறுவனத்தில் அல்லது ஒரு பிரசித்த தனியார் நிறுவனத்தில் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு நிறைவேற்றுப் பதவியில் பெற்ற அனுபவம் எனப்பொருள்படும்.

* **'முகாமைத்துவம்'** என்பது கணக்கியலிலும் நிதியியலிலும் பிரதான அங்கமாக அடங்கும் ஒரு முகாமைத்துவ/பொது நிருவாக/வியாபார நிருவாக பட்டம் எனப்பொருள்படும்.

**சம்பள அளவுத்திட்டங்கள்**

உள்ளகக் கணக்காய்வாளர் பதவி: - U-EX 3 (II) ரூ. 95,320-7x2,170; 11x2,700-140,210 மாதாந்தம் + (ரூ. 12,800 வாழ்க்கைப்படி + ரூ 5,000 மாதாந்தக் கொடுப்பனவு + 45% MCA + 20% மேலதிக் கொடுப்பனவு மற்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள்)

**ஆட்சேர்ப்பு முறை**

கட்டமைக்கப்பட்டவொரு நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.